




# தினப்புயல்

PTN news

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06





மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 38

## டெங்கு அனர்த்தம் குறித்த எச்சரிக்கை



பருவ மழை பெய்ய ஆரம்பித்துள்ளதால் அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக. அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் எஸ்.அகிலன் தெரிவித்துள்ளார். (02)

## நெல்லிற்கான விலை தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானம்



எதிர்வரும் பெரும்போகத்தில் ஒரு கிலோ நெல்லிற்கு 70 ரூபா விலையை நிர்ணயிக்க ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

கரிம உர பாவனையினால் ஏற்படும் பயிர் சேதங்களுக்காக வழங்கப்படும் நட்ட ஈடு தொடர்பில் சுற்றறிக்கை ஒன்றை வெளியிடும் வரையில் பயிர்ச் செய்கையில் இருந்து விலகிக் கொள்வதாக விவசாயிகள் போராட்ட மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (02)

## மலிங்கவின் சாதனையை முறியடித்த ஷாகிப் அல் ஹசன்




## ஓய்வூதியம் தொடர்பான அறிவிப்பு




அரசாங்கத்தின் ஓய்வூதியம் கிடைக்காதவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் வேலைத் திட்டம் விரிவுபடுத்தப்படவுள்ளதாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் என்.எச்.எம்.சித்ரானந்த தெரிவித்துள்ளார். (02)

## 21ஆம் திகதி பாடசாலைகளை ஆரம்பிப்பதா? இல்லையா?




**எதிர்வரும் 21ஆம் திகதி பாடசாலைகளை ஆரம்பிப்பதா இல்லையா என்பது தொடர்பில் இன்றைய தினம் கூட்டிணைந்த அறிக்கை ஒன்றை அதிபர், ஆசிரியர் சங்கங்கள் இணைந்து முன்வைக்கவுள்ளதாக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.**

**நேற்று (17) கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். சில குழுக்கள் தங்களை மிரட்டுவதாகவும் அவ்வாறு மிரட்டுவதன் ஊடாக பிரச்சினையை தீர்க்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.**

டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் 7ஆவது சீசன் நேற்று தொடங்கிய நிலையில். முதல் சுற்று லீக் ஆட்டத்தில் ஸ்கொட்லாந்து. வங்கதேசம் அணிகள் மோதியது. இதில் டொஸ் வென்ற வங்கதேச அணி பீல்டிங்கைத் தேர்வு செய்தது. வங்கதேசம் அணியின் சகலதுறை ஆட்டக்காரரான ஷாகிப் அல் ஹசன். 2 விக்கெட் வீழ்த்தினார். இதன் மூலம். சர்வதேச 20 ஓவர் போட்டிகளில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய இலங்கை வீரர் மலிங்கவின் சாதனையை முறியடித்தார். மொத்தம் 80 டி20 போட்டிகளில் விளையாடி உள்ள ஷாகிப் அல் அசன். மொத்தம் 108 விக்கெட்டுகளை கைப்பற்றி உள்ளார். (02)

## டெங்கு அனர்த்தம்...

கொரோனாத் தொற்று காரணமாக பாடசாலைகள் நீண்ட காலமாக மூடப்பட்டுள்ளதால் அப்பிரதேசத்தில் டெங்கு நுளம்பு அதிகமாக பரவக் கூடிய வாய்ப்புகள் காணப்படுவதால் பொது மக்கள் அவதானமாக செயற்பட்டு குறித்த இடங்களை டெங்கு துளம்புகள் அற்ற இடங்களாக உறு திப்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும், சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் எஸ்.அகிலன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒலுவில், அட்டாளைச்சேனை மற்றும் பாலமுனை ஆகிய பிரதேசங்கள் அதிகமாக டெங்கு நோய் பரவக் கூடிய இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

டெங்கு நுளம்பு பரவக்கூடிய இடங்கள் காணப்படுமாயின் 2 வார காலத்திற்குள் துப்பரவு செய்ய வேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் சட்டநடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் விழிப்புடன் செயல்பட்டு வீடுகளில் தேங்கியுள்ள குப்பைகள், நீர் தங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு இடம் கொடுக்காத வகையில் துப்புரவாக தமது வதிவிடங்களை இடங்களை வைத்து கொள்ளுமாறு சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் எஸ். அகிலன் கேட்டுக்கொண்டுள்ளார்.

(அரசாங்க தகவல் திணைக்களம்)

## நெல்லிற்கான...

மெதிரிகிரிய, கவுடுல்ல பகுதியில் உள்ள விவசாயிகள் இம்முறை பெரும் போகத்திற்கு அரசாங்கத்தின் அறிவுறுத்தலின் அடிப்படையில் கரிம உரத்தை உற்பத்தியை ஆரம்பித்துள்ளனர்.

எவ்வாறாயினும் குறித்த உரம் இதுவரையில் உக்காத காரணத்தினால் விவசாய நடவடிக்கைகளுக்கு அதனை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## ஓய்வூதியம்...

இது தொடர்பாக வெளியிட்டிருக்கும் ஆவணத்தில், இதற்கான ஏற்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

கொவிட் நெருக்கடி காரணமாக பொருளாதார சிக்கலை எதிர்கொண்டிருக்கின்றபோதும் எதிர்காலத்தில் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அரசாங்க தகவல் திணைக்களம்)

## மலிங்கவின்...

மலிங்கா 107 விக்கெட்டுகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார். மேலும் டி20 கிரிக்கெட் போட்டிகளில் 100க்கும் அதிகமான விக்கெட் மற்றும் 1000க்கும் அதிகமான ரன்கள் எடுத்த ஒரே வீரர் என்ற பெருமையை ஷாகிப் அல் ஹசன் பெற்றுள்ளார். உலக சாதனை படைத்த ஷாகிப் அல் ஹசனுக்கு வங்கதேச கிரிக்கெட் வாரியம் வாழ்த்து தெரிவித்துள்ளது.

**(அப்துல் ஜெப்பார் அப்துல்லா)**

## கேரளாவில் கடும் மழை – உயிரிழப்பு 26 ஆக உயர்வு

கேரள மாநிலத்தில் நிலவும் கடும் மழையுடனான வானிலை காரண மாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 26 ஆக உயர்வடைந்துள்ளது. அத்துடன் பலர் காணாமல் போயுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்நிலையில் அங்கு தொடர்ந்தும் கடும் மழையுடனான வானிலை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கேரளாவின் கோட்டயம் பகுதியில் பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளதோடு அதில் பலர் காணாமல் போயுள்ளனர். காணாமல் போனவர்களை மீட்கும் பணியில் இராணுவத்தினரும், மீட்பு பணியாளர்களும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.




## கிழக்கின் மண் கொள்ளையர்கள்

**ஆதாரங்களுடன் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்**

(நேற்றைய தொடர்ச்சி...)

**கேள்வி : ஒரு வியாபார நோக்குடன் தனிநபர் ஒருவருக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப் படுவது வழமையான நடவடிக்கை தானே?**

**பதில் :** நிச்சயமாக. அதில் இருக்கும் பிரச்சினை என்னவென்றால் அவர்கள் அரசியலைவிட்டு விலகி வியாபாரிகளாக இருந்து வியாபாரம் செய்யட்டும். என்னுடைய பார்வை என்னவென்றால் அரசில் இருந்துகொண்டு அமைச்சுப் பதவிகளையும் அபிவிருத்திக் குழுப் பதவிகளையும் வைத்துக்கொண்டு அதாவது அதிகாரத்தை தாங்கள் வைத்துக்கொண்டு, அவர்கள் ஒப்பந்தக் காரர்களாகவும், வியாபாரிகளாகவும் இருந்தால் மேற்கூறிய பிரச்சினைகளுக்கு அவர்களால் தீர்வு வருமா? அவர்கள் பிரச்சினைகளை நிறுத்துவார்கள் என நாம் எதிர்பார்க்க முடியுமா? அப்படியெனில் அவர்கள் மக்களிடம் நாங்கள் வியாபாரிகள். துரதிஸ்டவசமாக நீங்கள் எங்களுக்கு வாக்களித்து பாராளுமன்றம் அனுப்பியுள்ளீர்கள். அரசாங்கம் எங்களுக்கு பதவிகளைத் தந்திருக்கிறது. இந்த பதவிகளை நாங்கள் பெற்றது வியாபார நோக்கத்துடன் தான் என கூறட்டும். மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவர் ஒரு வருடத்தின் பின்னர் தான் இதுகுறித்துப் பேசியிருக்கிறார். ஒரு வருடமாக மண் அனுமதிப்பத்திரங்களை நிறுத்தாமல் பார்த்துக்கொண்டு இருந்துவிட்டு இன்று நிறுத்தப்போகிறோம் எனக்கூறுவதிலும் சந்தேகம் வலுக்கிறது. நான் மேலே கூறிய பெயர்ப் பட்டியல் நான் தயாரித்ததல்ல. அவை உத்தியோகபூர்வமான தகவல். மண் அனுமதிப்பத்திரங்கள் இவர்களின் பெயர்களில் இருக்கிறது. பட்டியலை நான் நிதியமைச்சிடம் கையளித்திருக்கிறேன். இது மட்டக்களப்பு மக்களுக்கு செய்யும் அநீதியாகும். இதனால் அரசிற்கான வருமானம் குறைவு. விற்பனையாளர்கள் அதிக அளவில் இலாபம் பெறுகிறார்கள். எதிர்கால சந்ததிக்குரிய வளங்களை இவ்வாறு ஒருசிலர் மாத்திரம் ஒரேயடியாக சூறையாடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

## மஹிந்தானந்தவின் கொடும்பாவியை எரித்து விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில்



நுவரெலியா நகரில் மஹிந்தானந்தவின் கொடும்பாவியை எரித்து விவசாயிகள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். இரசாயன உரம் வழங்கக் கோரியும் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்விற்கும் எதிர்ப்பு தெரிவித்தே இந்த ஆர்பாட்டம் இடம்பெற்றது.

நுவரெலியா விவசாய சங்கங்களும், பௌத்த குருமார்களும் இணைந்து நேற்று (17) காலை நுவரெலியா தபால் நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் எதிர்ப்பு பேரணியையும் முன்னெடுத்தனர். உரம் தட்டுப்பாடு காரணமாக தமது விவசாய தொழிற்துறையை முன்னெடுக்க முடியாது பெரும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியிருப்பதாக தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பால் நுவரெலியா மக்கள் மட்டுமல்ல நாட்டு மக்களே பாதிப்படைந்துள்ளதாக கோசம் எழுப்பினர்.

பின்னர் நகரின் பிரதான வீதியூடாக எதிர்ப்பு பேரணியை ஆர்பாட்டக்காரர்கள் முன்னெடுத்ததுடன் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின் கொடும்பாவியும் எரித்து எதிர்ப்பினை வெளியிட்டனர். விவசாய சங்கங்களின் இந்த ஆர்பாட்டத்திற்கு பௌத்த மதகுருமார்களும் இணைந்து கொண்டதுடன் நகரின் வர்த்த நிலையங்களும் இரண்டு மணித்தியாலங்கள் வரை மூடி தமது ஆதரவை வழங்கினர்.

-மலையக நிருபர் இராமச்சந்திரன்-

**உலக சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெய்யின் விலை அதிகரித்து வரும் நிலையில் விரைவாகத் தீர்வு வழங்குமாறு கனியவள கூட்டுதாபனம் மீண்டும் திறைசேரியிடம் கோரியுள்ளது.**

**நேற்றைய தினம் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 85 அமெரிக்க டொலருக்கும் அதிகமாகப் பதிவானது.**

**இதனை இலங்கை 92 அமெரிக்க டொலருக்கு கொள்வனவு செய்கின்றது. இந்த நிலைமை தொடர்ந்தும் தங்களது உத்தியோகபூர்வ நிலைப்பாட்டிற்கு பிரச்சினையாக உள்ளதென கனியவள கூட்டுதாபனத்தின் தலைவர் சட்டத்தரணி சுமித் விஜேசிங்க தெரிவித்தார்.**